செ.வெ.எண்: 960 நாள்.29-10-2010

ஐந்திணை நிலவகைகளில் பாரம்பரிய மரபணு பூங்கா – சென்னையில் இரண்டாவது மாநில அளவிலான வழிகாட்டுக்குழு கூட்டம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கோவையில் நடைப்பெற்ற உலகச் செம்மொழி மாநாட்டில் பாரம்பரியமிக்க ஐந்திணைகள் குறித்து, மரபணு பூங்காக்கள் அமைக்கப்படும் என அறிவித்ததின் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகளை கருத்தாய்வு செய்ய இன்று 29.10.10 தலைமை செயலக வேளாண் துறை கூட்ட வளாகத்தில் பாரம்பரிய மரபணு பூங்கா அமைப்பது குறித்த மாநில அளவிலான வழிகாட்டுக் குழுவின் இரண்டாவது குழுக் கூட்டம், குழுவின் தலைவர் முனைவர் எம்.எஸ்.சுவாமிநாதன், பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் குழுவின் உறுப்பினர்களான பல்வேறு துறைச் செயலர்கள், வேளாண், கால்நடை மற்றும் தமிழ் வளர்ச்சி பல்கலைக்கழக துணை வேந்தர்கள் மற்றும் துறை வல்லுனர்கள் கலந்து கொண்டு மரபணு பூங்காக்கள் அமைப்பது குறித்த முன்னேற்றம் மற்றும் மேல் நடவடிக்கைகள் விவாதிக்கப்பட்டது.

இதற்கிடையே இப்பூங்காக்களுக்கான மாவட்ட அளவிலான குழுக்கள் கூட்டப்பட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் பரிந்துரைக்கப்பட்ட குறிப்புகள் மற்றும் மாநில அளவிலான வழிநடத்தும் குழு உறுப்பினர்கள் பரிந்துரைத்த குறிப்புகள் அனைத்தும் இப்பூங்காக்கள் அமைப்பதற்கான வடிவமைப்பில் சேர்க்க, நில வடிவமைப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், தமிழ்நாட்டில் சேலம் மாவட்டம் ஏற்காட்டில் அமையவுள்ள குறிஞ்சி பூங்கா, திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை பகுதியில் அமையவுள்ள முல்லை பூங்கா, தஞ்சாவூர் மாவட்டம் சாக்கோட்டை (மருதாநல்லூர்) பகுதியில் அமையவுள்ள மருதம் பூங்கா, நாகப்பட்டினம் மாவட்டம் திருக்கடையூரில் அமையவுள்ள நெய்தல் பூங்கா மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் அச்சடிப்பிரம்பு கிராமத்தில் அமையவுள்ள பாலை பூங்கா அமைப்பதன் இறுதி வடிவமைப்பு நில வடிவமைப்பாளரால் கணிணி மூலம் செயற் படத்துடன் விளக்கிக் கூறப்பட்டது. பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ஆலோசனையின் அடிப்படையில் ஐந்திணை பூங்காக்களுக்கான வடிவமைப்பு ஆய்வு செய்யப்பட்டது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

29/10/10
for கோட்டக்கணை இயக்குநர்
சென்னை.